வகுப்பு : 9

தேர்வு எண் | | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022 - 23

நேரம் : 3.00 மணி]

## சமூக அறிவியல்

[மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I

I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக. 14x1=14

1. மௌரிய ஆட்சி அமைப்பு மற்றும் சமூகம் குறித்த செய்திகளைத் தன் குறிப்புகளால் அளித்தவர் ---------
அ) மார்க்கோபோலோ ஆ) ஃபாஹியான் இ) மெகஸ்தனிஸ் ஈ) செல்யூகஸ்

2. ------- என்ற கிரேக்க நகர அரசு, பாரசீகர்களை இறுதிவரை எதிர்த்து நின்றது.
அ) அக்ரோபொலிஸ் ஆ) ஸ்பார்ட்டா இ) ஏதென்ஸ் ஈ) ரோம்

3. ஸ்கூல் ஆஃப் ஏதென்ஸ் என்ற ஓவியத்தை வரைந்தவர் -------
அ) ரஃபேல் ஆ) மைக்கேல் ஆஞ்சலோ இ) அல்புரூட் டியரர் ஈ) லியானார்டோ டாவின்சி

4. i) யாங்ட்சி ஆறு சீனாவின் துயரம் என்று அழைக்கப்படுகிறது.
ii) வு – டி சீனப்பெருஞ்சுவரைக் கட்டினார்
iii) சீனர்கள் வெடிமருந்தைக் கண்டுபிடித்தனர்
iv) தாவோயிசத்தை நிறுவியவர் மென்சியஸ் என்று சீன மரபு கூறுகிறது.
அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (iii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி

5. பருவக்காற்று என்பது --------
அ) நிலவும் காற்று ஆ) காலமுறைக் காற்றுகள் இ) தலக்காற்று ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. உயிர்க் கோளத்தின் மிகச் சிறிய அலகு -------
அ) சூழ்நிலை மண்டலம் ஆ) பல்லுயிர்த் தொகுதி இ) சுற்றுச்சூழல் ஈ) இவற்றில் எதுவும் இல்லை

7. கூற்று : சுண்ணாம்பு பாறை பகுதிகளில் நிலத்தடி நீர் குறைவாக இருக்கும்.
காரணம் : நீர் சுண்ணாம்பு பாறையில் உட்புகாது.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று மற்றும் காரணம் தவறு ஈ) கூற்று மற்றும் காரணம் சரி

8. ஒவ்வோர் ஆண்டும் "உலக மக்கள் தொகை தினம்" ---- ஆம் நாள் கடைபிடிக்கப்படுகிறது.
அ) ஆகஸ்டு 11 ஆ) செப்டம்பர் 11 இ) ஜீலை 11 ஈ) ஜனவரி 11

9. இந்தியாவில் சுதந்திரத்திற்குப் பிறகு முதல் பொதுத் தேர்தல் நடைபெற்ற ஆண்டு ------
அ) 1948 – 49 ஆ) 1951 – 52 இ) 1957 – 58 ஈ) 1947 – 48

10. கூற்று (A) : இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான அழுத்தக் குழுக்கள் காணப்படுகின்றன.
காரணம் (R) : அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பதை போல இந்தியாவில் அழுத்தக் குழுக்கள் வளர்ச்சியடையவில்லை.
அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது.

11. ---- கான நோபல்பரிசு கைலாஷ் சத்தியார்த்தி மற்றும் மலாலாவிற்கு கொடுக்கப்பட்டது.
அ) இலக்கியம் ஆ) அமைதி இ) இயற்பியல் ஈ) பொருளாதாரம்

12. பல ஆண்டுகளின் உபயோகத்திற்குப் பிறகு தீர்ந்து போகும் வளம் ------
அ) இயற்கை ஆ) புதுப்பிக்க இயலும் வளம்
இ) புதுப்பிக்க இயலாத வளம் ஈ) புதியவை

13. பின்வருவனவற்றில் எது முதன்மைத்துறை சார்ந்ததல்ல?
அ) வேளாண்மை ஆ) உற்பத்தி இ) சுரங்கத் தொழில் ஈ) மீன்பிடித்தொழில்

14. இவற்றுள் உணவல்லாத பயிர் எது?
அ) கம்பு ஆ) கேழ்வரகு இ) சோளம் ஈ) தென்னை

பகுதி – II

II. ஏதேனும் 10 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும்.
கேள்வி எண். 28 கட்டாய வினா. 10x2=20

15. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் – விவரி.
16. மும்மணிகள் (திரி – ரத்னா) இச்சொல்லை விளக்கிக் கூறுக.
17. சீனப் பெருஞ்சுவர்.
18. கொலம்பியப் பரிமாற்றம் என்றால் என்ன?
19. ஆழிப்பேரலைகள் என்றால் என்ன?
20. உயிரினச்சிதைவு என்றால் என்ன?
21. கடலடி நிலத்தோற்றங்கள் யாவை?

22. ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.
23. அடிப்படை உரிமைகள் யாவை?
24. ஒற்றையாட்சி முறை – வரையறு.
25. பொருளாதாரத்தில் தொழிலாளர் சக்தி என்றால் என்ன?
26. இயற்கைப் பணம் என்றால் என்ன?
27. உணவுப்பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும் உணவல்லாத பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும் எழுதுக.
28. வரையறு. மக்கள் தொகை கணக்கெடுப்பு

## பகுதி – III

III. ஏதேனும் பத்து வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.
கேள்வி எண் 42க்கு கட்டாய வினா. 10x5=50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
   - i) கை கோடரிகளும் வெட்டுக் கருவிகளும் ------ பண்பாட்டைச் சேர்ந்த முக்கியமான கருவி வகைகளாகும்
   - ii) கி.பி 1453 கான்ஸ்டாண்டிநோபிளை ---- கைப்பற்றினார்
   - iii) பிறச்சார்பு ஊட்ட உயிர்கள் என அழைக்கப்படுபவை ------
   - iv) பாராளுமன்ற ஆட்சி முறை ------ என்றும் அழைக்கப்படுகிறது.
   - v) இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் அச்சகம் தொடங்கப்பட்ட இடம் ------

30. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| i) | சூரிய சக்தி | – | சர்வதேச அங்கீகாரம் பெற்ற பணம் |
| ii) | அமெரிக்கடாலர் | – | தேங்காய், கொண்டைக்கடலை |
| iii) | ஏ. டி. எம் | – | புதுப்பிக்க தக்க வளங்கள் |
| iv) | பருப்பு வகைகள் | – | தானியங்கி இயந்திரம் |
| v) | உணவல்லாத பயிர்கள் | – | உளுந்து, துவரை, பாசிப்பயிறு |

31. அ) வேறுபடுத்துக.
   - i) வானிலை மற்றும் காலநிலை
   - ii) முதல்நிலைத் மற்றும் இரண்டாம் நிலைத் தொழில்

   ஆ) காரணம் கூறுக.
   - i) உயிர்க்கோளம் ஒரு நிலையான சூழல் மண்டலத்தைக் கொண்டுள்ளது.

32. சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் எழுதுக.
33. கி.பி.1526 முதல் 1707 வரையிலான அரசியல் மாற்றங்களை விவாதி.
34. புவியியல் சார் கண்டுபிடிப்புகளில் விளைவுகள் குறித்து ஆராய்க.
35. புவி அமைப்பை விவரி.
36. சூழ்நிலை மண்டலத்தின் பல்வேறு கூறுகளை விவரி.
37. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
38. தொழிலாளர் சட்டத்தின் மூலம் தொழிலாளர் பெறும் நன்மைகள் யாவை?
39. அதிபர் மக்களாட்சி முறைக்கும் நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக.
40. விவரி – அ) முதன்மைத்துறை ஆ) இரண்டாம் துறை இ) சார்புத்துறை
41. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரி.
42. கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.
   1. கடல்வழித் தடங்கள் வாஸ்கோடகாமா
   2. கொலம்பஸ் வழித்தடங்கள்
   3. நன்னம்பிக்கை முனை
   4. கோழிக்கோடு
   5. பசிபிக் பெருங்கடல்

## பகுதி – IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 2x8=16

43. அ) சிந்துவெளி நாகரிகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.


(அல்லது)


ஆ) வளிமண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக?

44. அ) பின்வரும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.
   - i) கொள்ளை நோயால் பாதிக்கப்பட்ட நாடு
   - ii) டென்மார்க்
   - iii) ஹீவாங்கோ ஆறு
   - iv) பிரெய்ரி
   - v) டௌன்ஸ்
   - vi) பசிபிக் நெருப்பு வளையம்
   - vii) இமயமலைத் தொடர்
   - viii) புவி அதிர்ச்சி மண்டலம் (any one)

(அல்லது)

ஆ) பின்வரும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.
   - i) செயல்படும் எரிமலை (any one)
   - ii) டெல்டா பகுதி (any one)
   - iii) சுண்ணாம்புப் பிரதேச பகுதி
   - iv) வெப்ப பாலைவனம் (any one)
   - v) குளிர் பாலைவனம் (any one)
   - vi) ஸ்டெப்பி
   - vii) பிரேசில்
   - viii) கனடா


WORLD
180° 150° 140° 120° 100° 60° 60° 40° 20° 0° 20° 40° 60° 80° 80° 100° 120° 160° 180°
80°
70°
66°
80°
30°
23½°
20°
0°
20°
23½°
30°
40°



WORLD
180° 150° 140° 120° 100° 60° 60° 40° 20° 0° 20° 40° 60° 80° 80° 100° 120° 160° 180°
80°
70°
66°
80°
23½°
30°
20°
0°
20°
23½°
30°
40°